**Previous Examination Date**

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure
In the Court of the Judicial Magistrate, Palani.
சி.சி.280/16

Deposition of Witness.P.W. 1

| | |
|---|---|
| Name: ராமசாமி | Father Name: முருகனகவுண்டர் |
| Village: | Taluk: |
| Caste: | Calling: |
| Religion: | Age: |

சாட்சி ஆஜர். சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார். 09-07-19

**முதல் விசாரணை**

நான் அமரபூண்டியில் வசித்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன்.நான் சம்பவ காலத்தில் அமரபூண்டி கிராமபால் உற்பத்தியாளர் சங்கத்தில் செயலாளராக பணியாற்றினேன். 1-வது எதிரி சங்கத்தில் தலைவராக இருந்தார். 2,3 எதிரிகள் 1.வது எதிரியினுடைய சகோதரர்கள். நானும் எதிரியும் ஒரே ஊரைச் சார்ந்தவர்கள். நான் 1998-ம் வருடம் முதல் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கத்தில் செயலாளராக பணியாற்றினேன். நான் வகித்த செயலாளர் பதவி என்பது அரசு ஊழியர் என்ற பதத்திற்குள் வரக்கூடியது ஆகும். சங்கத்தினுடைய வரவு செலவு கணக்குகளை பராமரிப்பு செய்தது நான்தான். ஆவணங்கள் எனது பராமரிப்பில் தான் இருந்தது. 23-6-14-ம் தேதி அன்று மாலை சுமார் 7.30 மணியளவில் எனது பணிகளை முடித்துவிட்டு சங்கத்திலிருந்து எனது வீட்டுக்கு கிளம்பிய போது தலைவர் 1-வது எதிரி ராஜேந்திரன் உள்ளூர் பால்விற்பனை தொகை அனைத்தையும் என்னிடம் வழங்கவேண்டும் என்று சொன்னார். அதற்கு நான் மறுப்பு தெரிவித்துவிட்டேன். நான் தான் தலைவர், நான் சொல்வதைத்தான் நீ செய்ய வேண்டுமடா தாயோழி , தேவடியா பயலே என்று திட்டினார். நான் அவ்வாறு பேசாதீர்கள். கணக்கு வாக்கில் வித்தியாசம் வந்துவிடும் என்று சொன்னேன். அப்போது அவர் அருகில் இருந்த தம்பி கருப்புச்சாமி எனது அண்ணன் சொல்வதைத்தான் செய்ய வேண்டும் என அநாவசியமாக பேசி அருகில் இருந்த அலுமினிய பால்கேன் மூடியை எடுத்து எனது அடித்ததில் இடதுகால் மொழியில் காயம் ஏற்பட்டது. அவரது அண்ணன் 3.-வது எதிரி பொன்னுச்சாமி என்பவர் அவனை கொல்லாமல் விடாதீர்கள் என்று சொல்லி வேகமாக வந்தார். அதற்குள் கூட்டம் கூடிவிட்டது. எனக்கு அடிபட்டு ரத்தம் வந்ததால் சின்னச்சாமி மகன் கருப்புச்சாமி, கருப்புச்சாமி மகன் குமரவேல் ஆகியோர் என்னை பழனி அரசு மருத்துவமனைக்கு அழைத்துவந்தார்கள். மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை

பெற்றேன். மறுநாள் காலை ஆயக்குடி காவல்ஆய்வாளர் என்னை விசாரித்தார். நடந்த விவரங்களை அவரிடம் சொன்னேன். எதிரிகளுக்கு ஆளும் கட்சி பலம் இருந்ததால் நான் கொடுத்த புகாரின் மீது சாதாரண வழக்கு பதிவு செய்துவிட்டு என்மீது பிணையில் வரமுடியாத பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்தார்கள். நான் கொடுத்த புகாரினை Mistake FIR என முடித்து விட்டார்கள். நான் 1-7-14-ம் தேதி பிணையில் இருந்து வெளியில் வந்த பிறகு சங்கத்திற்கு சென்றபோது என்னை நிரந்தர பணிநீக்கம் செய்ததாக கூறிவிட்டார்கள். நான் மருத்துவமனையில் இருந்தபோது ஆயக்குடி போலிசார் என்னிடம் காட்டப்படும் வாக்குமூலம் பு.த.சா.ஆ.1 ஆகும். காவல்துறை தரப்பில் நடவடிக்கை எடுக்கதாதல் நான் நீதிமன்றத்தில் ஆட்சேபனை தாக்கல் செய்தேன். நான் செய்த ஆட்சேபனை மனு பு.த.சா.ஆ.2 ஆகும். எனது புகாரின் மீது நடவடிக்கை எடுக்க கேட்டுக் கொள்கிறேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

**Previous Examination Date**

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure
In the Court of the Judicial Magistrate, Palani.
சி.சி.280/16

Deposition of Witness.P.W. 2

| | |
|---|---|
| Name: முத்துவேல் | Father Name: கிருஷ்ணசாமி |
| Village: | Taluk: |
| Caste: | Calling: |
| Religion: | Age: |

சாட்சி ஆஜர். சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார். 09-07-19

**முதல் விசாரணை**

நான் அமரபூண்டியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். புகார்தாரரை தெரியும். எதிரிகளையும் தெரியும். புகார்தாரர் ராமசாமி அமரபூண்டி பால்செசைட்டியில் செயலாளராக வேலை செய்தார். எதிரி ராஜேந்திரன் பால்செசைட்டியில் தலைவராக இருந்தார். 2,3 எதிரிகள் 1-வது எதிரியினுடைய சகோதரர்கள். 23-6-14-ம் தேதி இரவு 7.30 மணிக்கு நான் செசைட்டியில் பால் வாங்குவதற்காக சென்றேன். அப்போது தலைவருக்கும் செயலாளருக்கும் இடையே பிரச்சனை நடந்தது. அப்போது தலைவர் கணக்கு கேட்டுள்ளார். புகார்தாரர் கணக்கை கொடுத்து விடுவதாக சொல்லியுள்ளார். தலைவர் ஆவணங்களை கேட்டார். செயலாளர் அதற்கு தன் உயர்அதிகாரிகளிடம் தான் கொடுப்பதாகச் சொன்னார். தலைவர் தகாத வார்த்தையால் தாயோழி என்று சொல்லி என்னிடம் தான் கொடுக்கவேண்டும் என்று சொன்னார். அவரது சகோதரர் பொன்னுச்சாமி கொலை மிரட்டல் விடுத்தார். கருப்புச்சாமி கேன் மூடியை கழட்டி செயலாளரை தாக்கினார். அதில் அவருக்கு இடதுகால்முட்டியில் காயம் ஏற்பட்டது. அதன்பிறகு கூட்டம் கூடிவிட்டது. மருத்துவமனைக்கு அழைத்துப்போனார்கள்.சம்பவம் எனக்கு நேரடியாகத் தெரியும்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை.**

**Previous Examination Date**

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure
In the  Court of the Judicial Magistrate, Palani.
சி.சி.280/16

Deposition of Witness.P.W. 2

| | |
|---|---|
| Name: | Father Name: |
| Village: | Taluk: |
| Caste: | Calling: |
| Religion: | Age: |

சாட்சி ஆஜர். சாட்சி  சத்தியபிரமாணம் செய்யப்பட்டார். 09-07-19

**முதல் விசாரணை**